**செய்தி வெளியீடு எண்.542** **நாள்.27.8.2009**

## பத்திரிகைச் செய்தி

### ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத மின்சாதனங்கள் பறிமுதல்

இன்று (26–08–09) தொழில் வணிகத் துறையின் கீழ் உள்ள தரக்கட்டுப்பாடு ஆணை செயலாக்க மையத்தின் துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னியல்) (பொறுப்பு) அவர்கள் சென்னை கீரிம்ஸ் ரோடு, ஆயிரம் விளக்கு பகுதியில் மின்சாதனங்கள் விற்பனை செய்யும் கடைகளில் தீடீர் ஆய்வு மேற்கொண்ட போது திருவாளர் இந்தியா எலக்ட்ரானிக் நிறுவனத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத மின்சாதனங்கள் இந்திய அரசின் தரக்கட்டுப்பாடு ஆணை 2003ஐ மீறிய செயல் என்பதால் கைப்பற்றப்பட்டது.

இந்நிறுவன உரிமையாளர் திரு.எ.எஸ். நூர்முகமது மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்து சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்திய தர நிர்ணய அமைவன சட்டப்பிரிவு 33ன் படி தரக்கட்டுப்பாடு ஆணை மீறுவோர்க்கு அதிகபட்ச அபராதமாக ரூ.50,000–ம் மற்றும் அல்லது அதிகபட்சமாக ஒராண்டு சிறைதண்டனை வழங்கபடும்.

துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னியல்) (பொறுப்பு)

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**